செ. கு. எண்: 115 நாள் : 27.10.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.10.2015

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், நுந்தளா மட்டம், சிவசக்தி என்ற இடம் அருகே உதகமண்டலம் - குந்தா பிரதான சாலையில் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மீது 21.6.2015 அன்று சாலையோர இரு மரங்கள் திடீரென சாய்ந்து விழுந்ததில், பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த திரு. துல்சன் என்பவர் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், செட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாகாளி என்பவரின் மகன் ரங்கசாமி 22.6.2015 அன்று வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த போது பலத்த மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், பெரியாங்குப்பம் கிராமம், காந்தி நகர் பகுதியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் சிறுவன் சரண் 23.6.2015 அன்று சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த போது, காற்றுடன் பெய்த மழையின் காரணமாக சாலையோர மரத்தின் கிளை முறிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், ஆலப்பாக்கம் கிராமம், கிழக்குக் கடற்கரை சாலையில் 29.6.2015 அன்று இரு கார்கள் மோதி விபத்து ஏற்பட்டதில், காரில் பயணம் செய்தவர்களை காவல் துறையினர் விசாரணை செய்து கொண்டிருந்த போது, எதிரே வந்த லாரி நிலை தடுமாறி கார்கள் மீது மோதியதில் கார்களில் பயணம் செய்த சென்னை கே.கே.நகரைச் சேர்ந்த திரு. தனபால் என்பவரின் மனைவி விஜயா, மரக்காணம், ஆலப்பாக்கம் கிராம், ஜெகநாதபுரம் பகுதியைச் சேர்ந்த திரு. துரைக்கண்ணு என்பவரின் மகன் சங்கர், திரு. ஜெயவேல் என்பவரின் மகன் சுரேஷ், திரு. தண்டபாணி என்பவரின் மகன் காளிதாஸ் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், சில்வார்பட்டி கிராமம், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள புதிய உணவுக் கூட கட்டடத்தில் 29.6.2015 அன்று புதியதாக பாய்லர்கள் பொருத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, திடீரென பாய்லர் வெடித்ததில் திண்டுகல் நகரம், தெய்வசிகாமணிபுரத்தைச் சேர்ந்த திரு. சந்தானம் என்பவரின் மகன் அருளானந்தம் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், சில்வார்பட்டி கிராமம், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள புதிய உணவுக் கூட கட்டடத்தில் 29.6.2015 அன்று புதியதாக பாய்லர்கள் பெருத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, திடீரென பாய்லர் வெடித்ததில் தொழிலாளர்கள் திரு. முருகன், திரு. குணசேகரன் மற்றும் திரு. முருகையா ஆகியோர் பலத்த காயமடைந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், திண்டுக்கல் மாவட்டம், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள புதிய உணவுக் கூட கட்டடத்தில் 29.6.2015 அன்று பாய்லர்கள் பொருத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, திடீரென பாய்லர் வெடித்ததில் பலத்த காயமடைந்த மூன்று நபர்களுக்கு தலா 50,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**